**இலங்கை தேயிலை சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேயிலை சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் சபை

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியமம் 07 இன் படி மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு நட்டத்திற்கு சீராக்கல் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் மீள்மதிப்பீட்டு மிகையை சீராக்கிய பின்னர் காணப்படும் இலாபத்துடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. மேலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு அசைவிற்கு தாக்கத்தை ஏற்படுத்தாத விடயம் ஒன்றாக தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் வருமான வரி ஒதுக்கம் ரூபா 144,758,895 தொகை மற்றும் நிலையான சொத்துக்களுக்கான சீராக்கம் என ரூபா 14,521,855 தொகையும் 2019 ஆண்டிற்கான நூலகப் புத்தகங்களுக்கான பெறுமானத் தேய்வுச் செலவும் ரூபா 53,350 தொகையும் முன்னைய ஆண்டிற்காக நடைமுறை ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 653,262 இற்கான சீராக்கல்களும் செயற்பாட்டு விளைவுகளில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளது. | ஐயவினாவை ஏற்றுக்கொள்கின்றேன். சரி செய்யப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரதியொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு ரூபா 119,194,204 தொகை கிரயத்தை உடைய ஆய்வுகூட உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்களும், நீர், மின்சார உபகரணங்கள், அலங்கார உபகரணங்கள், நூலகப் புத்தகங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தி வந்த போதும் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் அந்தச் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | இலங்கை தேயிலை சபையின் சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலத்தை மீண்டும் மதிப்பீடு செய்தல் அரசாங்க பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களம் மற்றும் உள்ளகக் குழு ஒன்றின் மூலம் மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டது. ஆய்வுகூட உபகரணங்களுக்காக விஷேடத்துவர் உதவியுடன் மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. அந்த அறிக்கை கிடைத்த பின்னர் 2021 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் மீள்மதிப்பீட்டு சீராக்கல்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 36 பந்தியின் படி ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரண விடயம் ஒன்று மீள் மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களை சேர்ந்த ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கல் மீள்மதிப்பீடு செய்யும் போது தலைமை அலுவலகத்தை அந்தச் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்திருக்கவில்லை. | நியமத்தின் பந்தி 36 இன் படி இலங்கை தேயிலை சபையின் தலைமை அலுவலக சொத்துக்கள் வகுப்பு முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு இணங்க ஏதேனும் சொத்தொன்றை சேர்ந்த மொத்த சொத்து வகுப்பையும் முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டின் போது தேயிலை மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தில் இருந்து ரூபா 1,000 மில்லியன் தொகையும், 2020 ஆண்டில் மேலும் அந்த நிதியத்தில் மிகைப் பணம் ரூபா 509.62 மில்லியன் தொகையும் திறைசேரிக்கு சபையினால் வழங்கியிருந்ததுடன், இந்தத் தொகை நிதிக் கூற்றுக்களில் பெறவேண்டிய கடன் மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், திறைசேரியின் நிதிக் கூற்றுக்களில் இந்த மீதி இலங்கை தேயிலை சபைக்கு செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதிகளை உறுதிப்படுத்தல்களும் சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்தத் தொகை திரட்டிய நிதியத்திற்கு சாட்டுதல் தொடர்பாக கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | பெற வேண்டிய தொகை ஒன்று அல்லாததினால் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டு சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு ஜுன் மாதம் 10 மற்றும் 11 திகதிகளில் அமெரிக்காவில் நடாத்துவதற்கு திட்டமிட்டிருந்த உலக தேயிலை வர்த்தகக் கண்காட்சியில் காண்காட்சி அறைகள் | மேம்பாட்டு பணிப்பாளரின் எழுத்துமூல பரிந்துரையின் படி நிதியங்கள் அனுப்பும் போது குறிப்பிட்ட தொகை செலவு என கணக்கீடு செய்யப்பட்டமையால் இந்த சிக்கல் ஏற்பட்டிருந்தது. | முதலில் முற்பணம் என கணக்கீடு செய்து செலவு மேற்கொண்ட பின்னர் செலவு என கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்குவதற்காக 2020 ஜனவரி 08 திகதி ரூபா 4,474,728 தொகை (USD $ 24,395) ஐக்கிய இராஜ்ஜியத்தில் சிகாகோ நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் வங்கிக் கணக்கு இலக்கம் 811104744 கொண்ட வங்கிக் கணக்கொன்றுக்கு அனுப்பப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அப்போது நிலவிய உலகளாவிய கொரோனா நிலைமையின் காரணமாக இந்த கண்காட்சி நடாத்துவதில்லை என கண்காட்சிக் குழு தீர்மானித்திருந்ததுடன், 2020 ஆகஸ்ட் 29 திகதி மின் அஞ்சல் மூலம் இந்த செலுத்தியிருந்த முழுத் தொகையையும் திருப்பி செலுத்தாமல் 2021 ஜூலை 14, 16 திகதிகளில் நடாத்துவதற்கு தீர்மானித்திருந்த உலக தேயிலை வர்த்தகக் கண்காட்சிக்காக காட்சி அறைகள் ஒதுக்கிக் கொள்வதற்காக செலவு வைக்கும்படி சபையினால் மேற்கூறிய நிறுவனத்திற்கு அறிவித்திருந்தது. அவ்வாறு இருக்கும் போது இந்த முற்பணத் தொகை மீளாய்வாண்டின் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த செலவினை உறுதிப்படுத்துவதற்காக தேவையான பற்றுச்சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் குறிப்பிட்ட நிதியம் முற்பணம் என கணக்கீடு செய்வதற்கும் செலவு ஆவணங்கள் கிடைத்த பின்னர் செலவுகள் என கணக்கீடு செய்வதற்கும் அறிவுரை வழங்கப்பட்டது. செலவுகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக குறிப்பிட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டு ஆவணம் மற்றும் 2021/505/97 கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரதியொன்று சமர்ப்பிக்கின்றேன். | |
| (இ) | பயிற்சிப் பாடநெறி செலவுகளுக்காக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுறுவாகிய ரூபா 2,280,165 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டு அத்தொகையை அட்டுறு செலவுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்கு பதிலாக செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன்படி செலவுக் கணக்கு மற்றும் அட்டுறுச் செலவுக் கணக்கு அத்தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் போது குறிப்பிட்ட சரி செய்தலுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் சரியாக உரிய கணக்குகளுக்கு கணக்கீடு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தலைமை அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்தினால் விற்பனை செய்யப்படும் தேயிலை நுகர்வோருக்கு வழங்கும் போது அவற்றை போடுவதற்காக தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து “கட்டளை இலக்கம் 18829” கீழ் 2018 ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 3,645,000 இற்கான சிறு மற்றும் பெரிய கடதாசி உறைகள் 30,000 தொடர்பாக உரிய முறையில் இருப்புப் பதிவுகள் பேணப்படல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அனைத்து சேதமடைந்த மற்றும் குறைபாடுடனான உறைகள் வழங்குனருக்கு திருப்பி ஒப்படைத்தியிருந்த போதிலும் வழங்குனருக்கு திருப்பி செலுத்தப்பட வேண்டிய தொகை என ரூபா 1,404,640 தொகை 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அட்டுறு செலவின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | களஞ்சியத்தில் 2018.10.25 திகதி முதல் 2019.04.04 திகதி வரை பேணப்பட்டிருந்த பேரேடு 2018 ஆண்டின் இறுதி இருப்பு மெய்மையாய்தலின் போது மற்றும் 2019.04.04 திகதி இருப்பு மெய்மையாய்தலின் போது நிதிப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. பழுதடைந்த கடதாசி உறைகள் வழங்குனருக்கு வழங்குவதற்கு பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், பழுதடைந்த உறைகள் மீண்டும் தயாரித்து களஞ்சியத்திற்கு சமர்ப்பித்தவுடனே அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருப்பி அனுப்பப்பட்டமையால் கடன்கொடுத்தோர் மீதி குறைவடைவதனால் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 207,342,040 தொகை நடைமுறை சொத்துக்களின் கீழ் பெறவேண்டிய வட்டி என காட்டுவதற்கு பதிலாக நிலையான வைப்பு முதலீட்டின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக முதலீட்டு அட்டவணையின் கீழ் காட்டப்பட்டது. எவ்வாறாயினும் 2021 ஆண்டின் போது பெறவேண்டிய வட்டி மற்றும் பெற்ற வட்டி என்பன சரியான முறையில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும். | பெற வேண்டிய வட்டி வருமானம் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) | 2019 ஆண்டின் முன்மாதிரி தேயிலைக் காணிகள் நிறுவும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உதவி நிதி பெறும் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த இலங்கை வங்கியின் 562353 இலக்க காசோலை மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 300,000 உதவி நிதி அந்த செயற்திட்டத்திற்காக அவரின் விருப்பமின்மை தெரிவிக்கப்பட்டமையால் திருப்பி செலுத்தியிருந்த அந்த ரூபா | 2021 ஆண்டின் போது குறிப்பிட்ட சரிசெய்தல்களுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டது. | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் சரியாக குறிப்பிட்ட கணக்குகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

300,000 தொகை குறிப்பிட்ட செலவுக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக மேலும் உதவி நிதி பெறுவோருக்கு செலுத்த வேண்டிய தொகை என 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்குகளில் உட்படுத்தப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) | | |
| (அ) | ஆய்வுகூட வருமானம் | 2,461,600 | 7,050,200 | 4,588,600 | மாதிரி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு தோல்வியடையும் மாதிரிகளுக்காக மாத்திரம் ஆய்வுகூடத்தினால் இன்வொயிஸ் பத்திரத்துடன் பணம் அறவீடு செய்தவற்காக நிதிப் பிரிவிற்கு அனுப்புவதற்காக தேயிலை ஆணையாளர் பிரிவிற்கு அனுப்பப்படுகின்றது. எவ்வாறாயினும், நிதிப் பிரிவு மற்றும் ஆய்வுகூட மற்றும் தேயிலை ஆணையாளர் பிரிவுக்கு சொந்தமான ஆவணங்களை இணக்கஞ் செய்யும் செயற்பாடொன்று நடைபெறாமையால் வித்தியாசம் ஒன்று காணப்படுகின்றது. எவ்வாறாயினும் நிதிப் பிரிவில் பதிவு செய்யப்படும் வருமானம் உண்மையானதும் | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | சரியானதும் ஆகும். | |
| (ஆ) | காகிதாகிகள் இருப்பு | 8,628,347 | 6,912,816 | 1,715,531 | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்திற்கான காரணம் பிழையான முறையில் பதிவொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையாலே ஆகும். இதனை நாட்குறிப்பின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது. | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |
| (இ) | வெற்று பொதிப் பெட்டிகள் இருப்பு | 3,553,486 | 4,674,398 | 1,120,912 | பொதி இருப்பின் வித்தயாசத்திற்கான காரணத்தை விரிவாக பரிசோதனை செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்ய வேண்டும். |

### 1.5.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உள்நாட்டு நுகர்வுக்காக அல்லது ஏற்றுமதி செய்வதற்காக தேயிலை பொதி செய்வதில் ஈடுபடும் அனைத்து பொதி செய்வோர் தொடர்பாக இலக்கம் 386/13 மற்றும் 1986 ஜனவரி 28 திகதிய அதிவிஷேட வர்த்தமானி மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டளைகள் பொருந்துவதுடன் இலக்கம் 04 மற்றும் 06 பிரிவுகளின் பிரகாரம் பதிவு கட்டணம் ரூபா 1,000 தொகை மற்றும் பதிவினை புதுப்பிக்கும் கட்டணம் ரூபா 500 தொகை முறைப்பிரகாரம் திருத்தியிருக்காததுடன், சபை பதிவு செய்தல் கட்டணம் திருத்துவதற்கும் பதிவு செய்தலை புதுப்பித்தலுக்காக கட்டணம் அறவீடு செய்யாமல் இருப்பதற்கும் | உள்நாட்டு விற்பனையாளர்களுக்கான பதிவு செய்தல் கட்டணம் முறையான அங்கீகாரம் இன்றி அறவீடு செய்யப்பட்ட போதிலும் பின்னர் தேயிலை ஆணையாளரின் அங்கீகாரத்தின் படி பதிவு செய்தல் கட்டணம் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | அமைச்சரினால் அதிவிஷேட வர்த்தமானி ஒன்றின் மூலம் கட்டணம் திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுத்திருந்ததால் 2015 ஆண்டு முதல் உள்நாட்டு தேயிலை பொதி செய்வோர் பதிவு செய்தலை புதுப்பிக்கும் கட்டண வருமானத்தை சபை இழந்ததுடன், 2020 ஆண்டின் போது முறையான அங்கீகாரம் இன்றி அறவீடு செய்யப்பட்ட பதிவு செய்தல் கட்டணம் ரூபா 1,303,800 தொகையாகும். | | |
| (ஆ) | 2020 ஆண்டு இறுதியில் உள்ளவாறு சபையில் பதிவு செய்யப்பட்ட மொத்த உள்நாட்டு தேயிலை பொதி செய்வோரின் எண்ணிக்கை 758 ஆக இருந்ததுடன், அவற்றில் 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்திருந்த புதிய பொதி செய்வோர் தவிர மீதியான பொதி செய்வோரின் எண்ணிக்கை 538 தொகையாக இருந்தது. அந்த எண்ணிக்கையில் 212 மாத்திரம் பதிவினை புதுப்பித்திருந்ததுடன், அவை மொத்த எண்ணிக்கையில் 28 சதவீதமாகும். அதன் காரணமாக பதிவு செய்தலை புதுப்பித்தல் தொடர்பாக சபையின் மேற்பார்வை திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக உள்நாட்டு பொதிசெய்வோரின் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் குறைவடைந்திருந்தது. அதே போல் பதிவு செய்தலை புதுப்பிக்குமாறு வழங்குனர்களுக்கு பகிரங்க பத்திரிகை அறிவித்தல் மற்றும் இலங்கை தேயிலை சபையின் இணைய பக்கத்திலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது. | உள்நாட்டு தேயிலை பொதி செய்வோரின் பதிவினை புதுப்பித்தல் தொடர்பாக சபை முறையான மேற்பார்வை ஒன்று மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | மேற்கூறிய (அ) இல் காட்டப்பட்டுள்ள அதிவிஷேட வர்த்தமானியில் 6 ஆம் பிரிவின் பிரகாரம் பொதி செய்யும் செயற்பாடுகள் தொடர்பாக ஈடுபடுவதற்காக தேவையான அனைத்து பதிவு செய்தலுக்காக ஒவ்வொரு வருடமும் ஜனவரி 31 திகதி அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே போல் 8 ஆவது பிரிவின் படி அனைத்து பதிவு செய்யும் பொதி செய்பவர்களினாலும், அடங்கியுள்ள தேயிலையை பிரதிநிதிப்படுத்தும் மாதிரி ஒன்றுடன் சில்லறை பொதிப் பாத்திரத்தில் மாதிரி ஒன்றும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறாயினும் தற்போது சபையில் பதிவு செய்துள்ள | வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடாத பதிவு செய்துள்ள பொதி செய்வோர் தவிர ஏனைய பொதி செய்வோர்கள் பதிவு செய்த விண்ணப்பத்துடன் மாதிரிகள் சமர்ப்பிக்கப்படுகின்றது. | வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் ஏனைய பதிவு செய்தோர் மாதிரி சமர்ப்பித்தல் தொடர்பாக முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொதி செய்வோர் அதன் படி செயற்படாமல் வியாபார அலுவல்கல் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் 2013/420 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு உள்நாட்டு நுகர்விற்கு பொருத்தமான தேயிலை தொடர்பாக ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குறுத்தல் அலுவல்களில் அறிக்கைகள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உள்நாட்டு நுகர்வுக்கு பொருத்தமற்ற தேயிலை சந்தையில் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | தரைப் பரப்பு 10 ஏக்கருக்கு மிகையாக உள்ள மத்திய அளவு மற்றும் பாரிய அளவு தோட்ட துறையினை அடங்கக் கூடிய விதமாக குறைந்த பட்ச கன்றுகள் கொள்ளளவினை ஒரு இலட்சம் தேயிலை கன்றுகளை கொண்ட 138 நாற்று மேடைகளுக்காக மற்றும் சிறிய அளவிலான தேயிலைக் கன்று 500 நாற்று மேடைகள் நிறுவுவதற்காக தேயிலை சிறு பற்று அதிகார சபைக்கு ரூபா 250 மில்லியன் தொகையும் உட்பட கூட்டுத்தொகை 450 மில்லியன் தொகை இலங்கை தேயிலை சபையின் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தில் இருந்து பணம் வழங்குவதற்கு தீர்மான இலக்கம் 2020/491/45 மற்றும் 2020/498/238 மூலம் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2010 ஒக்தோபர் 27 ஆந் திகதிய மற்றும் 1677/14 இலக்கங் கொண்ட தேயிலை மேம்படுத்தல் | தேயிலை மேம்படுத்தலும் தேயிலை கைத்தொழில் பெறுமதிச் சங்கிலியுள் (Value Chain) உட்படுவதுடன் அதன் சந்தைப்படுத்தல் என்பது வரையறுக்கப்பட்ட பகுதி ஒன்று மாத்திரமாகும். அடிப்படை உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவிற்கு நீண்டகால பரிகாரம் வழங்கப்படாமையால் பெறுமதி சங்கிலியில் ஒடுக்கம் அடைவதனால் இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பாரிய பின்னடைவிற்கு ஆளாகியுள்ளது. இந்த நிதியத்திற்கு புறம்பாக பணம் ஈடுபடுத்தல் ஒன்று அல்லாததுடன் அது கைத்தொழிலின் தற்போதைய முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட காலத்திற்கு பொருத்தமான தீர்மானம் என குறிப்பிட முடியும். மேலும், குறிப்பிட்ட நிதியம் நீண்டகால கடன் திட்டம் ஒன்று என பெறப்படுவதுடன் அது 2020/491/45 மற்றும் 2020/498/238 ஆகிய பணிப்பாளர் சபை | தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் குறிக்கோள்களுக்கு புறம்பாக பணம் செலவிடப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் விற்பனை உபாய முறைக்காக வரிசைகளுக்கு வர்த்தமானி கட்டளையின் படி தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியத்தின் பணம் இலங்கையில் மற்றும் வெளியேயும் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தும் மூலோபாய முறைக்கு உரிய செயற்படும் கருமங்களுக்காக மாத்திரம் பயன்படுத்த வேண்டியிருந்ததனால் இந்த செலவுகளின் மூலம் மேற்கூறிய சட்டம் மீறப்பட்டுள்ளது. அதே போல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் படி இந்த தொகை வட்டியில்லாத கடன் தொகை ஒன்று என வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபைக்கு 2020 ஆகஸ்ட் 31 திகதி செலுத்தப்பட்டிருந்த ரூபா 75 மில்லியனுக்கான தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இரு தரப்பினரிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. | பத்திரங்களில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட கடனின் தவணைகள் தேயிலை மீள் பயிர் செய்கை நிதியத்தல் இருந்து செலுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. | |
| (உ) | செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கிரய முறைமை ஒன்று (Activity Based Costing System) நிறுவுவதற்காக பெறுகை நடவடிக்கை முறைக்கு புறம்பாக பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதும் உசாத்துணைக் கட்டணமாக ரூபா 850,000 தொகை அட்டுறுச் செலவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | வரலாற்றுக் கிரய உரிஞ்சும் முறைமை காலங் கடந்த கிரயத்தை இனங்காணும் முறைமை ஒன்றாக காணப்பட்டமையால் அதற்கு மாற்றீடாக செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கிரய முறைமை அறிமுகப்படுத்துவது பொருத்தம் என நான் கலந்துகொண்ட ஜனாதிபதி செயலாற்றல் அறிஞர் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன் ABC முறைமை இலங்கைத் தேயிலைச் சபையில் செயற்படுத்த வேண்டும் என என்னால் யோசனை முன் வைக்கப்பட்டது. இந்த தீர்மானம் 2020 இறுதிப் பகுதியில் எடுக்கப்பட்ட போதிலும் வள பங்களிப்பாளர் ஒருவர் | பெற்றுக்கொள்ளாத சேவை ஒன்றிற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | இனங்காணல் மற்றும் ஆரம்ப கலந்துரையாடல் தாமதம் அடைந்ததால் செயற்படுத்துதல் 2021 ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஊ) | 1975 இன் 14 இலக்க தேயிலை சபைச் சட்டத்தின் 25(1) பிரிவின் படி சபையினால் கட்டளைகள் தயாரிக்க முடியும் எனினும், 25(3) பிரிவின் படி சபையினால் தயாரிக்கப்பட்ட எதுவித கட்டளைகளும், அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டால் அன்றி செல்லுபடியாகாது. அவ்வாறாயினும், இலக்கம் OR/1/87 மற்றும் 2010 ஆகஸ்ட் 06 திகதிய உள்ளகச் சுற்றறிக்கை மூலம் சபை கட்டணங்களை திருத்தி, திருத்திய கட்டணம் மீளாய்வாண்டு வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் 2010/392/94 கீழ் அங்கீகாரத்தின் மீது திருத்தப்பட்டிருந்ததுடன், இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் திருத்துவதற்காக தற்போது சட்ட வரைபுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதில் குறிப்பிட்ட கட்டண திருத்தமும் அடங்கியுள்ளது. | சட்டமா அதிபரின் ஆலோசனையின் படி சட்டத்தை திருத்தி கட்டணம் திருத்தப்பட வேண்டும். |
| (எ) | 2020.08.28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் I பகுதியில் 15.1(3) பிரகாரம் நியதிச் சட்டம் அல்லாத நிதியம் ஒன்று தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் காணப்பட்டால் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் சட்டரீதியாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியம் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், பொது நிதித் திணைக்களத்தின் PFD/MPI/FD/37 இலக்கம் கொண்ட மற்றும் 2021.07.22 திகதிய கடிதத்தின் மீதும் கவனம் செலுத்தப்படுகின்றது. | இலங்கை தேயிலைச் சபையின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்ற தேயிலை மேம்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வரி நிதியம் 1975 இன் 14 இலக்கம் கொண்ட இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்டிருந்த நியதிச் சட்ட பூர்வமான நிதியொன்றாகும். | பாராளுமன்ற சட்டம் ஒன்றின் மூலம் சட்டரீதியாக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய அமைச்சர் ஒருவர் மற்றும் முன்னைய மேலதிக செயலாளர் ஒருவர் மற்றும் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட சிலரின் வெளிநாட்டு பிரயாணச் செலவுகளின் கூட்டுத்தொகை ஆகிய ரூபா 975,257 தொகை 03 வருடங்கள் முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் பெறவேண்டிய மீதித் தொகையொன்றென காணப்படுவதுடன், 2021 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதியளவிலும் பெருந்தோட்ட அமைச்சிலிருந்து அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த வெளிநாட்டுப் பிரயாணம் இலங்கை தேயிலை சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட வெளிநாட்டுத் தேயிலை மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பானதாக இருந்தமையால் அதன் செலவுகள் இலங்கை தேயிலை சபையின் மேம்பாட்டுச் செலவுகள் என கணித்து கணக்கீடு செய்யும் படி அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அங்கீகாரம் கிடைத்ததுடன் குறிப்பிட்ட அறவிட வேண்டிய தொகையை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளித்தரப்பினரின் வெளிநாட்டுப் பிரயாணச் செலவுகளுக்காக செலவிடப்பட்டிருந்த இந்தத் தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | தேயிலை சிறுபற்று அபிவிருத்தி அதிகார சபை, வ/ப கலுபோவிடியான தேயிலைச் தொழிற்சாலை மற்றும் பெருந்தோட்ட அமைச்சு ஆகிய நிறுவனங்களை சேர்ந்த உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பிரயாண செலவுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 631,061 தொகை 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையான காலம் முதல் பெறவேண்டிய தொகை ஒன்று என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை தேயிலை சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவினை அறவீடு செய்வதற்காக பல தடவைகள் கடிதங்கள் அனுப்பப்பட்ட போதிலும் இதுவரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சபையின் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரிடம் அல்லது உரிய நிறுவனங்களிலிருந்து அறவீடு செய்ய வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய வருமான மீதியில் அடங்கியுள்ள ரூபா 261,060 தொகைக்கான நுவரெலிய சிலோன் டீ ஹவுஸ் இன் மீதி 06 வருடங்களாக முன்கொண்டு வந்து காணப்படுவதுடன் 2021 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | Tea House இன் 2014 ஆண்டில் அப்போதைய உத்தியோகத்தரினால் பெற்றிருந்த உணவு வகைக்காக பெற வேண்டிய தொகை ஒன்றாகும். உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கண்டறிய | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் இந்தப் பணத்தை தேயிலை சபைக்கு அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாமல் இருப்பதுடன், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பித்து பொறுத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | உற்பத்தி குறைபாடுடனான வெற்றுப் பொதி செய்யும் பெட்டிகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 1,313,986 தொகை அந்த நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் 4.3 பிரிவின் பிரகாரம் அறவீடு செய்யப்படவிருந்த போதிலும் அவ்வாறு அறவீடு செய்திருக்கவில்லை. இந்த மீதியில் ரூபா 1,312,231 தொகை 2019 ஆண்டின் போது அறவிடப்பட வேண்டியிருந்த மீதியொன்றாக இருந்தது. | உற்பத்திக் குறைபாடுடைய வெற்று பொதி செய்யும் பெட்டிகளுக்காக டீ டேன்க் நிறுவத்தில் இருந்து ரூபா 1,315,249.73 இற்கான தொகை அவர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த இன்வொயிஸ் இன் மூலம் குறைக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. குறைக்கப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று கணக்காய்விற்கு இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் தாமதம் இன்றி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2012 ஆண்டின் போது சிரியாவில் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அப்போது காணப்பட்ட யுத்த நிலைமையினால் இரத்துச் செய்யப்பட்ட ‘‘புட் எக்ஸ் சிரியா’’ கண்காட்சிக்காக 2011 ஆண்டின் போது சபையினால் வெளிநாட்டு தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மேற்கொண்டிருந்த ரூபா 629,261 இற்கான முற்கொடுப்பனவினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வழங்கியிருந்த தொகையை அறவீடு செய்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்த போதும் அதில் முன்னேற்றம் ஒன்று காணப்படவில்லை. நட்டம் ஒன்றென பதிவழிப்பதற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | ஐக்கிய அரபு இராஜ்யத்தின் வெளிநாட்டு தூதுவராலயத்தில் இருந்து மற்றும் மொஸ்கோ வெளிநாட்டு தூதுவராலயத்திலிருந்து 2017 ஆண்டு முதல் பெறவேண்டிய முறையே 249,130 தொகை மற்றும் ரூபா 203,847 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மொஸ்கோ வெளிநாட்டு தூதுவராலயத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 203,847 இற்கான தொகை 2020/505/99 மற்றும் 28.04.2021 பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி 2021 ஆண்டில் நட்டமொன்றென பதிவழிப்பதற்கு மற்றும் ஐக்கிய அரபு இராஜ்யத்தின் வெளிநாட்டு தூதுவராலயத்திலிருந்து பெற வேண்டிய ரூபா 249,130 | பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டேன். | |
| (எ) | 2017 ஆண்டின் போது உலகளாவிய தேயிலை உபசரிப்புக்காக வெளிநாட்டு தூதுவராலயங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 51,604,457 இற்கான தொகையில் 15 நாடுகளின் மீதியாகிய ரூபா 1,810,840 இற்கான தொகை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்திருக்கவில்லை. | 04 நாடுகள் தவிர நிலுவைத் தொகை வெளிநாட்டு விவகார அமைச்சின் பொது வைப்புக் கணக்கிற்கு கிடைத்து சில மீதிகள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. நிதியங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | விஷேட கருமங்களுக்காக வழங்கியிருந்த முற்பணத் தொகை கருமங்கள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் மீதிப் பணத்துடன் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2019 ஆண்டுகளுக்கான பிரயாணச் செலவுகள், காகிதாகிகள், எரிபொருள், மேலதிக நேரம் ஆகியவற்றுக்கான அட்டுறுச் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 595,816 தொகை 2020 திசெம்பர் 31 அளவிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை. | ஐய வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டுறுச் செலவுகள் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டிய தேவையின்மையினால் மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டது. | சரியாக அட்டுறுச் செலவுகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஒப்பந்த வேலைகளில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த ரூபா 9,550,530 இற்கான தொகை 02 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அந்த கருமாங்களுக்கு பொறுப்பான பிரிவுத் தலைவர்ளின் பரிந்துரையை பெற்று செலுத்தி முடிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட தரப்பினருக்கு விரைவாக தீர்ப்பதற்கு அல்லது உரிமை கோறப்படமாட்டாது என உறுதிப்படுத்தி வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களினால் பசுமைத் தேயிலை வழங்குவோருக்கு செலுத்துவதற்காக சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த வைப்புத் தொகை உரிய முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் | அடுத்த 03 மாதங்களில் செய்தித்தாள் அறிவித்தல் மூலம் நிலுவை கொழுந்துத் தொகை உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த முறைப்பாடு மற்றும் ஒத்த நிகழ்வாக மேற்கொள்ளப்பட்டிருந்த | செலுத்த வேண்டிய தரப்பினரை சரியாக இனங்கண்டு தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 01 வருடம் முதல் 18 வருடங்கள் வரை அதாவது 2000 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதிக்கான தீர்க்கப்படாத வைப்புக்களின் தொகை ரூபா 7,061,339 ஆகும். அது மொத்த வைப்புத் தொகையாகிய ரூபா 10,597,267 இன் 67 சதவீதம் ஆகும். | விசாரணைகளின் பின்னர் இந்த தொகையை செலுத்தி முடிப்பதற்கு அல்லது இந்தத் தொகையை மீண்டும் வைப்புச் செய்தவர்களுக்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| (ஈ) | 2015 ஆண்டு பச்சை தேயிலை கொழுந்துக்காக ரூபா 80 இற்கான குறைந்த விலையொன்று பேணிச் செல்வதற்காக கொழுந்து உரிமையாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக சபைக்கு திறைசேரியால் கிடைத்திருந்த ரூபா 6,738,000,000 தொகைக்கான உதவிநிதியில் 2015 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மீதியான ரூபா 912,229 தொகை உடன்படிக்கையின் பிரகாரம் திறைசேரிக்கு அனுப்பப்படாமல் மீளாய்வாண்டு இறுதி வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்தத் தொகை B 80 உதவி நிதி திட்டத்தின் கீழ் குருகொடஎல்ல மற்றும் கிரீன் ஹில்டொப் தேயிலை தொழிற்சாலைகளின் பரிசோதனை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யும் வரை தலைமை அலுவலக பொது வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கும் படி பதுரெலிய உதவித் தேயிலை ஆணையாரினால் அனுப்பியிருந்த தொகையொன்றாகும். அதனை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதித் தொகை திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1975 இன் 14 இலக்க இலங்கை தேயிலைச் சபைச் சட்டத்தின் பிரிவுகள் 13 மற்றும் 14 | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஸெஸ் வரி தேயிலை சபையின் நிதியம் ஒன்றிற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக திறைசேரிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | செஸ் வரி தொகை நிதியமைச்சினால் இலங்கை சுங்கத்திற்கு வழங்கியுள்ள அறிவுரைகளின் படி நேரடியாக திறைசேரிக்கு செலவு வைக்கப்பகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 751 | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்தினால் பொருட் பதிவேடு முறைப் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. | சபையின் பிரதான களஞ்சியத்தில் தேயிலை இருப்பு தொடர்பாக தற்போது ஆரம்ப விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கணினி மென்பொருள் ஒன்று கொள்வனவு செய்து | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பொருட் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அதன் மூலம் இருப்புக் கட்டுப்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 1971 இன் 38 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 11 | 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையினால் ரூபா 7,411,248,407 தொகை நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் முதலீடு செய்திருந்த போதிலும் அதற்காக உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை . | இலங்கை தேயிலை சபையினால் சேகரிக்கப்படும் தேயிலை மேம்பாட்டு நிதியம் பணிப்பாளர் சபை அறிவுருத்தி மிகவும் அநுகூலமான அரச வங்கி ஒன்றில் (இலங்கை வங்கி) அவ்வப்போது முதலீடு செய்யப்படுகின்றது. | 1971 இன் 38 இலக்க நிதி அதிகார சட்டத்தின் பிரிவு 11 இன் படி உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 செப்தம்பர் 21 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் கட்டளை | சபையினால் எதிர்பார்க்கப்பட்ட விவரக் குறிப்புக்களுக்கு இணங்காமையினால் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2009 ஆண்டின் போது ரூபா 32,132,088 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த பீடை நாசினி இரசாயன மூலக்கூறு பகுப்பாய்வு இயந்திரம் (Liquid Chromatography Mass Spectrometer) அறிக்கைத் திகதி வரை பயன்படுத்தி யிருக்கவில்லை. உள்ளக ஒழுக்காற்று விசாரணை பூர்த்தி செய்வதற்காக 11 வருடங்கள் கடந்திருந்ததுடன் முறையான ஒழுக்காற்று விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு இறுதித் தீர்மானத்திற்கு எடுத்திருக்கவில்லை. | பெறுகைகள் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணைக்காக பெறுகைக் கோவை அக்குழுவினால் பெறப்பட்டிருந்ததுடன், அந்த ஆவணங்களுடன் சான்றுபடுத்திய பிரதிகள் பெற்றுக்கொள்வதற்காக கணிசமான அளவு காலம் ஒன்று எடுத்தது. மேலும், குறிப்பிட்ட இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது சபையின் உத்தியோத்தர்களினால் ஏதேனும் முறைகேடுகள் ஏற்பட்டிருக்கின்றனவா என விசாரணை செய்து அறிவிப்பதற்காக மூன்றாவது தடவையாக 2020.09.22 விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டதுடன், அந்த விசாரணை அறிக்கை 2021 மார்ச் 31 திகதி நடைபெற்ற 504 ஆவது பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன்படி அப்போது ஆய்வுகூடத்திற்கு இணைக்கப்பட்டு | குறிப்பிட்ட விசாரணையை தாமதம் இன்றி பூர்த்தி செய்து பொருத்தமான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறான குறைபாடுகள் மீண்டும் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கடமையாற்றிய உதவிப் பணிப்பாளருக்கு எதிராக தற்போது குற்றப்பத்திரம் ஒன்று விநியோகிக்கப்பட்டு முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்கியிருக்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டு முதல் காணப்படும் ரூபா 771,552 தொகைக்கான தடுத்து வைத்தல் வரி மீதி மீளாய்வாண்டு வரை பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த தடுத்து வைத்தல் வரி மீதி 2020 ஆண்டின் வருமான வரி திரட்டில் உட்படுத்தி மிகை விதிப்பொன்று பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தடுத்து வைத்தல் வரி மீதி குறிப்பிட்ட காலப் பகுதியுள் பதிலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 21,447,654 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,675,523 தொகையாக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 24,123,177 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்கு ஆய்வுகூட வருமானம் 80 சதவீதத்தினால் மற்றும் நிதி வருமானம் 43 சதவீதத்தினால் மற்றும் ஏனைய வருமானங்கள் 80 சதவீதத்தினால் குறைவடைந்திருத்தல் முக்கிய காரணமாகியிருந்தது.

### 2.1 விகிதாசார பகுப்பாய்வு

மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை விகிதாசாரம் 1:14 உயர்ந்த பெறுமானத்தை கொண்டிருந்தது. விளம்பர மற்றும் மேம்பாட்டு நிதியத்தில் குறுகிய கால முதலீடு அதாவது நிலையான வைப்புக்கள் மொத்த நடைமுறை சொத்துக்களின் 75 சதவீதத்தை பிரதிநிதிப்படுத்துதல் இதற்கான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆண்டறிக்கையின் படி 2011 ஆண்டின் போது இலங்கைத் தேயிலைக்கான உலகளாவிய தேயிலை சந்தையின் பங்கு (World Prod Share) 18 சதவீதமாக காணப்பட்ட போது ஆக்கபூர்வமான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தும் தேவைக்காக 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான ஐந்தாண்டு கால காலப்பகுதியில் இலங்கை தேயிலையை மேம்படுத்துவதற்காக செயற்படுத்தப்பட்ட திட்டமுறைசார் திட்டம் 2020 திசெம்பர் வரை எதிர்பாரத்த முறையில் நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்ததுடன், சர்வதேச தேயிலைக் குழு செய்தித்தாள் பின்னிணைப்பு (Supplementary to International Tea Committee News Bulletin - 2020) படி மீளாய்வாண்டளவில் இலங்கை தேயிலைக்கான உலகளாவிய தேயிலைச் சந்தையின் பங்கு 14.6 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. | 2012 ஆண்டில் வழங்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி 2012 பெப்ரவரி மாதம் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் அமைச்சரவை பெறுகைக் குழு நியமனம் செய்யப்பட்டது. அதன்படி உரிய கேள்வி நடைமுறையினை கடைபிடித்து 2015 ஏப்ரல் மாதம் விளம்பர ஆக்கங்களுக்காக மற்றும் பொதுமக்கள் தொடர்புக்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதன்படி ஆக்கங்கள் சார்ந்த அலுவல்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஊடக கொள்வனவு தொடர்பாக சேர்க்கப்பட்டிருந்த ஆலோசனை பிரிவிற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2017 நவம்பர் மாதத்திலேயே கிடைக்கப் பெற்றிருந்தது. அதன்படி வெளிநாடுகளில் ஊடக கணிப்பீட்டு அலுவல்கள் மற்றும் ஊடக திட்டங்கள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், உலகளாவிய மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ரஷ்யாவில் மற்றும் உக்ரேனில் செயற்படுத்துவதற்காக 2021 ஏப்ரல் மாதத்திலேயே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு நாடுகளில் உலகளாவிய சீலோன் டீ (Ceylon Tea) மேம்பாட்டிற்கு தேவையான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த வருடம் கடைசிப் | இலங்கை தேயிலை மேம்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டிருந்த திட்டமுறைசார் திட்டத்தை விரைவாக செயற்படுத்துவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | பகுதியில் ஜப்பான் மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இந்த மேம்பாட்டுக் கருமங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | சபையினால் 2003 செப்தம்பர் 19 திகதி வழங்கியிருந்த ரூபா 25,000,000 இற்கான கடன்தொகை ஒன்றிற்காக மக்கள் பெருந்தோட்ட அதிகார சபைக்கு சொந்தமான ஹந்தானையில் அமைந்துள்ள தேயிலை நூதனசாலையின் (Ceylon Tea Museum) உரிமையை கைப்பற்றுவதற்காக மற்றும் அந்த மீதியை பதிவழிப்பதற்கு மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேயிலை சபை 2012 ஜுன் 19 திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் கட்டளையின் படி தீர்மானம் ஒன்றிற்கு எட்டியிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 30 திகதி கணக்காய்வுத் திகதி வரை 08 வருடங்களை மிகையான காலம் கடந்திருந்த போதிலும் இந்தச் செயற்பாடுகளை பூர்த்தி செய்திருக்கவில்லை.<br><br>தேயிலை நூதனசாலை உரிமையை உரித்தாக்குவதற்கு மற்றும் கடன் தொகை வழங்குவது தொடர்பாக இரு தரப்பினர்கள் இடையே உடன்படிக்கைகள் ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் 2020/492/65 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சபை தீர்மானத்தின் படி 2020 பெப்ரவரி 27 திகதி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி அதிகார சபையின் தோட்டத் தொகுதியில் தொழிலாளர் சம்பளம் செலுத்துவதற்காக தேயிலை சபையினால் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு மீண்டும் ரூபா 10,000,000 இற்கான கடன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை தேயிலை சபையின் ஹந்தானையில் அமைந்துள்ள தேயிலை நூதனசாலையில் அமைந்துள்ள காணி மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமாக இருந்ததுடன், அந்தக் காணியை பயன்படுத்துவதற்காக குத்தகை மற்றும் இலங்கை தேயிலை சபையினால் 02 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த ரூபா 35,000,000 தொகைக்காக பெறவேண்டிய வட்டியை கணித்து ஒன்றிற்கு ஒன்றை பிரதியீடு செய்து குறிப்பிட்ட காணிப்பகுதியை இலங்கை தேயிலை சபைக்கு உரித்தாக்குவதற்காக ஜனவசம தலைவருடன் நடைபெற்ற கலந்துரையாடலில் இணங்கப்பட்டது. எனினும், பின்னைய காலங்களில் இணங்கிய விடயங்களை மாற்றி இலங்கை தேயிலை சபைக்கு அறவிடப்பட வேண்டிய கடன்தொகையில் ரூபா 01 மில்லியன் தொகை ஜனவசமவினால் செலுத்தப்பட்டிருந்தது. ஏனைய நிலுவைத் தொகை எதிர்காலத்தில் தீர்ப்பதென அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது தொடர்பாக அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்திலும் கலந்துரையாடப்பட்டதுடன், அதன்படி இரண்டு தரப்பினராலும் இணைந்த கலந்துரையாடல் ஒன்று | இரு தரப்பினர் இடையேயும் உரிமையை உரித்தாக்கல், கடன் தொகையை செலுத்துதல் தொடர்பாக குறிப்பிட்ட இணக்கம் ஒன்றிற்கு விரைவாக அணுக வேண்டியிருந்தது. அதன்படி தீர்த்தல் விடயங்கள் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடாத்தப்படும் என அமைச்சின் செயலாளர் கருத்து வெளியிட்டிருந்தார். நிலவுகின்ற தொற்றுநோய் நிலைமை குறைந்த உடன் இது தொடர்பாக செயற்படுத்தப்படும் என அறிவிக்கின்றேன். | |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை தேயிலை சபையின் நுவரஎலிய பிராந்திய அலுவலகத்தின் தேயிலை விற்பனை நிலையத்தின் செயற்பாடுகளை 06 வருட காலப் பகுதிக்காக ரூபா 8,162,296 இற்கான குத்தகைத் தொகைக்கு செலுத்தக் கூடிய இயலுமையை பரிசோதனை மேற்கொள்ளாமல் தனிப்பட்ட தரப்பினருக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், வரி உடன்படிக்கையின் படி 2019 மே 27 திகதி முதல் 2020 மே 26 திகதி வரை ரூபா 100,000 வீதமும் 2020 மே 27 திகதி முதல் 2021 மே 26 திகதி வரை ரூபா 105,000 தொகை வீதமும் வாடகை தவணை அறவிட வேண்டிக் காணப்பட்ட போதிலும் 2020 ஆண்டிற்கான 03 மாதத்திற்கான வாடகை மாத்திரம் கிடைத்திருந்ததுடன், 2021 ஆண்டிற்காக வாடகைத் தவணை ஏதும் கணக்காய்வுத் திகதி வரை செலுத்தியிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் படி வாடகைதாரரினால் கிடைக்க வேண்டிய தொகை என ரூபா 900,000 தொகை காட்டப்பட்டிருந்ததுடன், பெறவேண்டிய நிலுவை தவணைப் பெறுமதி ரூபா 35,000 தொகை மற்றும் நூற்றிற்கு 1 சதவீத தண்டப்பணமும் விற்பனை நிலையத்தின் நீர் மின்சாரம் நுகர்வுகளுக்காக ரூபா 99,267 இற்கான தொகையொன்றும் வருடாந்த விற்பனைகளில் இருந்து 02 சதவீதத் தொகையொன்றும் தேயிலை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் கணக்குகளில் அந்தத் தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | 2019 மார்ச் 14 திகதி நடைபெற்ற திணைக்கள பெறுகைக் குழு கேள்விதாரரின் கொள்திறன் தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவினால் வழங்கியிருந்த பரிந்துரையை மிகைத்து கேள்விதாரரின் கொள்திறன் தொடர்பாக திருப்தி அடைய முடியும் என குறிப்பிட்டு குறிப்பிட்ட தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவை வரித்தொகையை கணக்கீடு செய்தல் மற்றும் அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 கருத்து முரண்பாட்டுத் தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உசாத்துணையாளர் ஒருவர் சேர்ப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் அல்லது வேறு சுற்றறிக்கைகளில் ஏற்பாடுகள் ஏதும் காணப்படாத போதிலும் பணிப்பாளர் சபையினால் 2020 மே 15 திகதி முதல் விஷேடத்துவ தேயிலை விளம்பர திறன்தொழில் உசாத்துணையாளர் என முன்னைய பணிப்பாளர் (மேம்பாடு) இன் சேவையை அமைச்சரவை அங்கீகாரம் இன்றி நீடிப்பு செய்து படியொன்றாக ரூபா 1,829,930 இற்கான கொடுப்பனவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவரின் சேவையை தொடர்ந்தும் அதாவது 2020 திசெம்பர் 31 திகதி வரை பெற்றுக்கொள்ளல் பொருத்தம் என பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டதுடன் அமைச்சரவையின் அணவல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்ப்புடன் அவரின் சேவையை 2020 திசெம்பர் வரை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2020 மே 15 திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது உசாத்துணை சேவை பெறப்பட்டதுடன் அதனடிப்படையில் 2020 மே 15 திகதி முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரை சேவை கால நீடிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | பூர்வாங்க அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்று ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேயிலையில் காணப்படும் பீடை நாசினி மீதிகளை பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வுகூடத்தில் நிறுவப்பட்டிருந்த (Gas Chromatography Mass Spectrometer) இயந்திரம் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்தமையால் புதிய இயந்திரம் ஒன்று நிறுவுவதற்காக 2018, 2019 ஆண்டுகளின் போது ரூபா 50,000,000 இற்கான பாதீட்டு ஏற்பாடுகள் | 2019 மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்யப்பட்டு ஆண்டிற்கான தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்யப்பட்டு கேள்வி அழைக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆண்டில் அந்தப் பெறுகைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமை மற்றும் 2020 ஆண்டின் போது இலங்கை தேயிலை சபையினால் பகுப்பாய்வு | சபையின் செயற்பாட்டுத் தொழிற்பாடுகளுக்குத் தேவையான பெறுகைகள், பெறுகைத் திட்டத்தின் படி தாமதம் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்துடன், 2020 ஆண்டின் பெறுகைத் திட்டத்தில் ரூபா 60,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் கணக்காய்வுத் திகதி வரை பெறுகை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆய்வுகூடத்திற்கு தேவையான LCMS-MS இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக GCMS இயந்திரத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்தியிருந்த காரணத்தினால் மிகவும் தேவையாக கருதப்பட்ட LCMS-MS இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதுடன், GCMS இயந்திரத்தின் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2021.04.08 திகதிய 2021 ஆண்டில் இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரை கிடைத்த பின்னர் கேள்வி அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 3.5 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை தேயிலை சபைக்கு சொந்தமான முறையே ரூபா 1,900,000 தொகை மற்றும் ரூபா 1,800,000 தொகை பெறுமதியான இரண்டு கப் வண்டிகள் 2017 நவம்பர் 28 திகதி தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தின் பயன்பாட்டிற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 ஏப்ரல் 30 கணக்காய்வுத் திகதி வரை பணம் அறவீடு செய்து மேற்கூறிய வாகனங்களின் சட்டரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>மீளாய்வாண்டின் போதும் சபையின் போக்குவரத்து தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ரூபா 2,665,121 தொகை செலவிடப்பட்டு தனியார் வாடகை வாகனம் | பெருந்தோட்ட அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தின் படி குறிப்பிட்ட இரண்டு வாகனங்கள் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தினால் பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதியினை செலுத்தி பின்னர் அதன் உரிமையை உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த வாகனங்களின் ஆக்கவளத் தன்மை (Economic Efficiency) மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் மேற்கொள்ள வேண்டியிருந்த | சுபைக்கு சொந்தமான வாகனங்கள் ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்படக்கூடாது. |

| | | |
|---|---|---|
| பயன்படுத்தப்பட்டிருந்தது. | செலவினை கவனத்தில் எடுத்து அவற்றை விற்பனை செய்தவற்காக தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், தனியார் வாடகை வாகனங்கள் பயன்படுத்துவதன் மூலம் தேயிலை சபையின் தேக்க வாகனங்களை பயன்படுத்துவதை விட இலங்கை தேயிலை சபையினால் செலவிடப்படும் கிரயம் (எரிபொருள், ஓட்ட, கிரய, சாரதி மேலதிக நேரம் ஆகிய) ஒப்பாக குறைவடைவதனால் பிரயாண முறைகளுக்காக கேள்வி நடைமுறையின் படி வாடகை வாகனங்களின் சேவையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 322 மற்றும் உள்ளவாறான பதவியணி 268 தொகை காணப்பட்டதுடன், அதன்படி 52 வெற்றிடங்கள் மற்றும் 02 மிகைகளும் காணப்பட்டன. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. ஒப்பந்த அடிப்படையில் 08 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 07 உம் வெற்றிடமாக காணப்பட்டது. | 2020.02.21 திகதிய முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் படி அனைத்து ஆட்சேர்ப்புக்களும் இடைநிறுத்தப்படல், Covid தொற்றுநோய் உளப்பாங்கு பரீட்சைகள் நடாத்துவதற்கு முடியாமை ஆகிய காரணங்களினால் ஆட்சேர்ப்பு திட்டமிட்டவாறு மேற்கொள்வதற்கு முடியாமல் இருந்தது. 02 மிகைப் பதவிகள் முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இலக்கம் 30 மற்றும் 30(1) படி மீள்கட்டமைப்பு செய்யும் போது வகிப்பவருக்கு தனிப்பட்ட முறையில் வழங்கியிருந்த பதவியாகும். ஒப்பந்த அடிப்படையில் 04 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தம் | அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் படி சபையின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு தேவையான பதவியணியினை சேர்ப்பதற்கும் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது, உலகளாவிய தேயிலை விளம்பர நிகழ்ச்சித் திட்டத்தின் திட்டத்தின் படி கிரபிக்ஸ் டிஸயினர் பதவி எதிர்காலத்தில் நிரப்பப்பட வேண்டியிருந்தமை, இன்னும் பல ஒப்பந்தப் பதவிகளுக்காக நிலையான பதவிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2021 இறுதி காலாண்டில் மற்றும் 2022 முதல் காலாண்டின் போது அனைத்து வெற்றிடங்களை நிறப்புவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கின்றேன். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலக்கம் பீஈடீ/12 மற்றும் 2003 ஜுன் 02 திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.3 இற்கு புறம்பாக 2018, 2019 ஆண்டுகளின் வருடாந்த அறிக்கைகள் கணக்காய்வுத் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.<br>அதேபோல் சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த அறிக்கையின் வரைபொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | 2018 வருடாந்த அறிக்கை 2021.04.07 திகதி பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. 2019 வருடாந்த அறிக்கைக்கு 2021.09.25 திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது.<br>2020 வருடாந்த அறிக்கை வரைபு தயாரித்தல் Covid தொற்றுநோய் காரணமாக தாமதம் அடைந்தது. இந்த மாத இறுதி அளவில் வரைபு ஒன்று தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணிப்பொறுப்பிற்கு போதியளவு பதவியணி ஒன்று இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வினை வலுப்படுத்துவதற்காக போதியளவு பதவியணி ஒன்று இணைக்கப்பட வேண்டும். |

**4.3 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ‘‘2030 நிகழ்ச்சித் திட்டம்’’ இன் படி சபையினால் தனது விடயப் பரப்பின் கீழ் வரக்கூடிய கருமங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பொருத்தமான குறிக்கோள்கள் காட்டப்பட்டிருந்த போதிலும் நெருங்க வேண்டிய இலக்குகள் மற்றும் அவற்றின் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக சபையினால் பொருத்தமான சுட்டிகளும் வருடாந்தம் நெருங்க வேண்டிய திருப்புமுனைகளையும் இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்குமாக பௌதீக மற்றும் நிதி இலக்குகள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான பங்களிப்புக்குக்கான இலங்கை தேயிலை சபைக்கு இலக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட அமுலாக்கல் அமைச்சின் கீழ் காணப்படும் நிலையேறான அபிவிருத்திக் குழுவினால் 2030 ஆண்டளவில் பெருந்தோட்டத் துறையினால் பெற்றுக்கொள்ள வேண்டிய குறிக்கோள்கள் தொடர்பாக உதவிகள் வழங்கப்படும் எனின் வருடாந்த செயற்பாடுகளுக்காக இலங்கை தேயிலை சபையினால் அந்த இலக்குகளை நெருங்குவதற்கு வழங்க வேண்டிய பங்களிப்பினை சதவீதமாக வழங்க முடியும். | 2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்திற்கு இணங்க வேண்டியுள்ளது. |